## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF, UTHANGARAI

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 24.07.2023 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case | : | O.S.No. 59/2016 | CNR.No | : | TNKI13-000551-2016 |
| Name | : | சங்கீதா | கணவர் பெயர் | : | ராமமூர்த்தி |
| Witness for | : | Plaintiff | Calling | : | PW1 |
| Age | : | 32 | Village | : | நாய்க்கனூர் |
| Taluk | : | ஊத்தங்கரை | District | : | கிருஷ்ணகிரி |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. **கடந்த 1992** தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்து பொன்னுசாமிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பொன்னுசாமி உடைய தந்தை வைத்திருந்த சொத்துக்களை விற்று அதில் வந்த பணத்தை வைத்து கிரயமாக வாங்கிய சொத்தாகும். நான் மேற்சொன்ன விவரத்தை என் வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணை பிரமாணபத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. **வா.சா.ஆ.1** தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் நான் மேற்சொன்ன இருந்த சொத்துக்களை விற்று வாங்கிய சொத்துக்களை சொல்லியுள்ளதா என்றால் இல்லை. **வா.சா.ஆ.1** தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் பொன்னுசாமிக்கு சுயார்ஜ்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி **வா.சா.ஆ.1** ஆவணத்தின் மூலம் எந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட சொத்துக்கள் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண், விஸ்தீரணம் ஞாபகம் இல்லை. **வா.சா.ஆ.1** தான பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு அதற்கும் என் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு **பி அட்டவணை** சொத்திற்கு என்னுடைய பாத்தியத்திற்கு பாத்தியத்தை காட்டும் வகையில் என் பேரில் வருவாய் துறை ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேன்னா என்றால் என் பேரில் இல்லை, எனது

தாத்தா பேரில் உள்ளது. எனது தாத்தா பேரில் உள்ளதாக சொல்லும் நிலையில் அதற்கான வருவாய் துறை ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ.1** ல் நான் சொல்லும் வழிப்பாதை எவ்வளவு அகலம்,எவ்வளவு நீளம், எவ்வளவு விஸ்தீரணம், எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு செல்லும் வழிப்பாதை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை, இந்த பத்திரம் எழுதிய பிறகு தான் பாதை என்று சுமார் 10 பேருக்கு நியமித்தார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வண்டி வழிப்பாதை என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. **வா.சா.ஆ.1** ஆவணத்தில் வழிப்பாதையின் அகலம் எதாவாது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் 3 அடி அகல பாதையில் வந்து சென்று கொண்டிருந்தோம். நான் சொல்லும் பாதை எந்த திசையில் இருந்து எந்த திசைக்கு செல்லும் பாதை என்றால் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் செல்லும் வழிபாதை. எந்த எந்த சர்வே எண்களில் தென்வடலாகவும் எந்தெந்த சர்வே எண்களில் கிழமேலாகவும் நான் சொல்லும் வண்டிபாதை செல்கிறது என்றால் சர்வே எண்கள் எனக்கு ஞாபகம் இல்லை.

4. **வா.சா.ஆ.1** தானபத்திரம் எழுதும் சமயத்தில் கிணற்றில் ஆயில் இன்ஜின் இருந்ததா என்றால் பொதுவாக இருந்தது. எந்த முறை வைத்து தண்ணீர் இறைக்கப்பட்டது என்றால் **1/3 ல்** பத்திரத்தில் கண்டவாறு இறைக்கப்பட்டது. அவ்வாறு மூன்றில் 1 பங்காக எத்தனை ஆண்டுகள் தண்ணீர் இறைக்கப்பட்டது என்றால் சுமார் 6-7 வருடங்கள் இருக்கும். எனது அம்மா தான் பயன்படுத்தி இறைத்துக்கொண்டிருந்தார். சாட்சி தற்போது எத்தனை வருடங்கள் என்று குறிப்பாக தெரியவில்லை சுமார் 10-15 ஆண்டுகள் இருக்கும் என்று சாட்சியம் அளிக்கிறார்.

5. நான் **09.05.1992** தேதியில் பிறந்தேன். **வா.சா.ஆ.1** தானபத்திரம் எழுதும் போது எனக்கு எவ்வளவு வயது என்றால் அப்பா இறந்த பிறகு மேற்படி சொத்து எழுதிக்கொடுத்தார் என்று என் அம்மா என்னிடம் சொன்னார். என்னுடைய தாத்தா பொன்னுசாமி பேரில் எவ்வளவு கிரைய சொத்துக்கள் வைத்திருந்தார் என்றால் சுமார் **4 1/2** ஏக்கர் சொத்துக்கள் வைத்திருந்தார். **வா.சா.ஆ.1** தானபத்திரமாக எழுதிக்கொடுத்த பிறகு

எவ்வளவு சொத்து யார் யார் பேரில் கொடுத்தார் என்றால் எனது பெரியப்பாவிற்கு சுமார் 3 ஏக்கர் கொடுத்துள்ள விவரம் நான் நகல் எடுத்து பார்த்து தெரிந்துக்கொண்டேன். நான் எப்போது அவ்வாறு நகல் எடுத்துப் பார்த்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பார்த்தேன். எவ்வளவு நாள் என்று ஞாபகம் இல்லை.

6. பொன்னுசாமி உயிருடன் இருக்கும் போது 3 ஏக்கர் நிலமும் கிணற்றில் மூன்றில் 2 பங்கும் மின் மோட்டார் சர்வீஸ் முழுவதையும் பெரியப்பா 2ம் பிரதிவாதி பெருமாளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் ஆமாம். பொதுவாக கிணற்றில் இருந்த ஆயில் இன்ஜினில் 1/3 பங்கு என்னுடைய அம்மாவும் 2/3 எனது பெரியப்பா 1ம் பிரதிவாதியும், எனது தாத்தாவும் தான் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் அந்த பொதுவாக இருந்த ஆயில் இன்ஜினை விற்பனை செய்து தான் மின் மோட்டார் வாங்கினார்கள். அந்த மின் மோட்டாரை பயன்படுத்தி தான் நாங்கள் இன்றளவும் விவசாயம் செய்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலோ மற்றும் முதல் விசாரணை பிரமாணபத்திரத்திலோ எந்த வருடத்தில் எவ்வளவு விலைக்கு நான் சொல்லியது போல் ஆயில் இன்ஜினை விற்று மின் மோட்டார் வாங்கப்பட்டது என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

7. எனது வழக்குரை ஏ அட்டவனை சொத்து விவரத்தில் கிணறு ஒன்றில் **6HP** ஆயில் இன்ஜீன், பம்பு, பைப் உட்பட்ட இவைகளில் பொதுவில் 3ல் 1 பங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரை மற்றும் பிரமாணபத்திரத்தில் எந்த மின் இணைப்பு கொண்டு, அதன் இணைப்பு எண்ணோ அல்லது எந்த வருடத்தில் இருந்து அவ்வாறு மின் இணைப்பு கொண்டு தண்ணீர் இறைத்து வருகிறோம் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை, ஆனால் அவ்வாறு தான் இறைத்து வருகிறோம். நான் எனது வழக்குரை அ அட்டவணை சொத்தில் உள்ள கிணற்றில் **6HP** ஆயில் இன்ஜின் கொண்டு 1/3 பங்கு இறைப்பதை தடுக்க கூடாது என்று தான் வழக்கு கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

8. நான் சொல்வது போல் ஆயில் இன்ஜினை வைத்து விற்பனை செய்து மின் இணைப்பு வாங்கவில்லை என்றும் இருக்கும் மின்

இணைப்பில் எனக்கு எந்த ஒரு பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொன்னுசாமி உயிருடன் இருக்கும் பொழுதே 2–ம் பிரதிவாதிக்கு மின் இணைப்பில் உள்ள உரிமையை முழுவதுமாக கொடுத்துவிட்டார் என்றும் அதை இன்றளவும் 2–ம் பிரதிவாதி தான் முழுவதுமாக பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, இன்றும் நான் அந்த மின் மோட்டாரில் தான் தண்ணீர் இறைத்து வருகிறேன். கிணற்றில் இருக்கும் மின் இணைப்பு **எண்.145** ல் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும் முழு பாத்தியமும் உரிமையும் 2–ம் பிரதிவாதிக்கே என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

G AMAR ANAND
DISTRICT MUNSIF, UTHANGARAI
Digitally signed by G AMAR ANAND
Location: KRISHNAGIRI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஊத்தங்கரை.